வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-வான்மதி

தேதி 8.9.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

வேளாண்மையின் சிறப்பை எடுத்துரைக்கும் நுவாக்கி பண்டிகை ஒடிசா மாநிலத்தில் இன்று கொண்டாடப்படுகிறது.

அனைவரும் கல்வி அறிவு பெறுவதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் சர்வதேச எழுத்தறிவு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

ஜம்மு காஷ்மீரில் நீக்கப்பட்ட சட்டப் பிரிவுகள் மீண்டும் சேர்க்கப்பட மாட்டாது என பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

பாரீசில் நடைபெற்று வந்த பாராலிம்பிக்ஸ் போட்டிகள் இன்றிரவு வண்ணமிகு கலை நிகழ்ச்சிகளுடன் நிறைவடைகின்றன.

முர்மு (14)

ஒடிசா மாநிலத்தில் நுவாக்கி பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது. வேளாண்மை சிறப்பை எடுத்துரைக்கும் விதமாக கொண்டாடப்படும் இப் பண்டிகையை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி

திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்டோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். நாட்டில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக கொண்டாடப்படும் இப் பண்டிகை ஒவ்வொருவரின் வாழ்விலும் நலத்தையும், மகிழ்ச்சியையும் கொண்டு வரட்டும் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தமது சமூக வலைதளப் பதிவில் வாழ்த்தியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக ஊடக எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், கடினமாக உழைக்கும் விவசாயிகளுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும், சமூகத்திற்காக அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளைப் பாராட்டுவதாகவும் தெரிவித்துள்ளார்.

*தன்கர்* (17)

சர்வதேச எழுத்தறிவு தினம் இன்று கொண்டாடப்படுகிறது. அனைவரும் கல்வி அறிவு பெறுவதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 8 ஆம் தேதி இந்த தினம் கடைபிடிக்ககப்படுகிறது. பன்மொழி கல்வியை ஊக்குவிப்போம்-பரஸ்பர புரிதல் மற்றும் அமைதிக்கு எழுத்தறிவை பயன்படுத்துவோம் என்பதே இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும். இத்தினத்தை ஒட்டி, நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புதுடெல்லி விஞ்ஞான் பவனில் இன்று நடைபெற்ற சர்வதேச எழுத்தறிவு தின சிறப்பு நிகழ்ச்சியில் குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கர் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார். அப்போது உரையாற்றிய அவர், இளைஞர்களின் திறனையும், ஆற்றலையும் முழுமையாக வெளிக் கொணரும் வகையில் தேசிய கல்விக் கொள்கை துவக்கப் பட்டு இருப்பதாக கூறினார். மேலும், புதிய கல்விக் கொள்கையில் தாய் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மனித குலத்திற்கு சேவையாற்ற விரும்பும் ஒவ்வொருவரும் தங்களது வாழ்நாளில் குறைந்தபட்சம் ஒருவருக்கு எழுத்தறிவை போதிக்க உறுதி ஏற்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

*ஜெய்சங்கர் (12)*

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தமது 5 நாள் அரசு முறை பயணத்தின் முதல் கட்டமாக இன்று சவுதி அரேபியா தலைநகர் ரியாத் சென்றடைந்தார். அங்கு நடைபெறும் முதலாவது இந்தியா-வளைகுடா நாடுகளின் ஒத்துழைப்பு குழு வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் அவர் உரையாற்ற உள்ளார். இம் மாநாட்டில் பங்கேற்க உள்ள வளைகுடா நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்களுடன் திரு ஜெய்சங்கர் இருதரப்பு பேச்சுவார்த்தைகளையும்

நடத்த உள்ளார். பின்னர், வரும் 10 ஆம் தேதி, 3 ஆவது முறையாக ஜெர்மன் தலைநகர் பெர்லின் செல்லும் அமைச்சர் அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் மற்றும் உயரதிகாரிகளுடன் இரு தரப்பு வர்த்தக உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார். 3 வது கட்டமாக வரும் 12 ஆம் தேதி திரு ஜெய்சங்கர் ஸ்விச்சர்லாந்து செல்ல உள்ளார்.

*அபுதாபி இளவரசர் (9)*

அபுதாபி பட்டத்து இளவரசர் திரு ஷேக் காலித் பின் முகமது பின் சயீத் அல் நஹ்யான் அரசு முறை பயணமாக இன்று புதுடெல்லி வந்தடைந்தார். அவருடன் அந்நாட்டு அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள், வணிக தலைவர்கள் உள்ளிட்ட உயர்மட்ட குழுவும் வந்துள்ளனர். அபுதாபி இளவரசர், பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்தித்து, இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து பேச உள்ளார். மேலும், மூத்த இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையும் நடத்த உள்ளார். பின்னர், பொருளாதார மற்றும் கலாச்சார பிணைப்புகளை வெளிப்படுத்தும் வகையிலான பல நிகழ்வுகளிலும் அவர் கலந்து கொள்ள உள்ளார்.

விபத்து (10)

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் இன்று கட்டடம் இடிந்து விழுந்ததில் ஏற்பட்ட விபத்தில் உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆக உயர்ந்துள்ளது. உயிர் இழந்தவர்களின் குடும்பத்தினருக்கு, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்டோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிராத்திப்பதாகவும் தெரிவித்துள்ளனர். இதனிடையே, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்குப் பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா 2 லட்ச ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் உதவித் தொகை வழங்கப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

ஆய்வுக் கூட்டம் (8)

ஒருங்கிணைந்த பாதுகாப்பு பணியாளர்கள் தலைமையகம் சார்பில் முப்படைகளின் மூத்த அதிகாரிகளுக்கான ஒருங்கிணைந்த செயல்பாட்டு மதிப்பீடு மற்றும் ஆய்வுக் கூட்டம் முதன் முறையாக புதுடெல்லியில்

நடைபெற உள்ளது. நாளை முதல் வரும் 13 ஆம் தேதி வரை 5 நாட்களுக்கு நடைபெற உள்ள இக்கூட்டத்தில், ஆயுதப்படைகளை நவீனமயமாக்குதல், புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல், எதிர்கால போர்களை திறம்பட நடத்துவது உள்ளிட்டவை குறித்து பல்வேறு துறைகளை சேர்ந்த 30 புகழ்பெற்ற வல்லுநர்களின் விரிவுரைகள் இடம் பெற உள்ளன.

*மன்சுக் மாண்டவியா* (16)

வரும் 2030 ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் 2036 ஆம் ஆண்டுக்கான கோடை கால ஒலிம்பிக் போட்டிகளை ஏற்று நடத்துவதற்கான நடவடிக்கைகளை இந்தியா முனைப்புடன் மேற்கொள்ளும் என மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற 44 ஆவது ஆசிய ஒலிம்பிக் குழு கூட்டத்தில் உரையாற்றிய அவர், 2014-15 ஆம் நிதியாண்டில் மத்திய அரசு 143 மில்லியன் டாலர் நிதியை விளையாட்டு துறைக்கு ஒதுக்கி இருந்த நிலையில், தற்போது, இத்துறைக்கான தொகை 470 மில்லியன் டாலராக கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளதாக திரு மாண்டவியா கூறினார்.

நிகழ்ச்சியில் பேசிய மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜேபி நட்டா, ஆசிய ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகள் பல்வேறு தரப்பு மக்களை ஒருங்கிணைப்பது மட்டும் அல்லாமல், சகோதரத்துவ உணர்வை உருவாக்குகிறது என்று கூறினார்.

ஒலிம்பிக் தருணங்கள் நாடுகள் இடையே நம்பிக்கை, ஒற்றுமை மற்றும் அமைதியை உருவாக்குவதாக இந்திய ஒலிம்பிக் சங்க தலைவர் பிடி உஷா தெரிவித்தார்.

ஹோமியோபதி (5)

தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் சுயநிதி மருத்துவ கல்லூரிகளில் நடப்பு கல்வி ஆண்டிற்கான சித்தா, யுனானி, ஹோமியோபதி மருத்துவ முதுநிலை படிப்புகளுக்கு மாணவர்கள் இணையதளம் வாயிலாக இன்று முதல் வரும் 20 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று இந்திய மருத்துவ ஹோமியோபதி நிறுவனம் அறிவித்துள்ளது.

தேர்தல் (11)

ஜம்மு காஷ்மீரில் 3 கட்டமாக நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலுக்கான பிரச்சாரம் சூடு பிடித்துள்ளது. முதல் கட்டமாக, வரும் 18 ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள ராம்பன் மாவட்டத்தில் நடைபெற்ற

பிரச்சார பொதுக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், பாஜக தலைமையிலான மத்திய அரசு 370 மற்றும் 35 ஏ சட்டப் பிரிவுகளை இம்மாநிலத்தில் ரத்து செய்ததன் விளைவாகவே அங்கு குறிப்பிடத் தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறினார். மேலும், பயங்கரவாதத்தில் இருந்து மீண்டு பாதுகாப்பான சுற்றுலா மற்றும் வளர்ச்சிக்கு அங்கீகரிக்கப்பட்ட பகுதியாக இம்மாநிலம் மாறி உள்ளது என்றும், நீக்கப்பட்ட சட்டப் பிரிவுகள் மீண்டும் சேர்க்கப்பட மாட்டாது என்றும் உறுதிப்பட கூறினார்.

*பாராலிம்பிக்ஸ்* (10)

கடந்த மாதம் 28 ஆம் தேதி தொடங்கி, பாரீசில் நடைபெற்று வந்த பாராலிம்பிக்ஸ் போட்டிகள் இன்றிரவு வண்ணமிகு கலை நிகழ்ச்சிகளுடன் நிறைவடைகின்றன. இந்தியா சார்பில், வில் வித்தை வீரர் ஹர்விந்தர் சிங், தடகள வீராங்கனை ப்ரீத்தி பால் ஆகியோர் நிறைவு விழாவில் தேசிய கொடியை ஏந்தி, இந்திய அணி வீரர்களை வழி நடத்தி செல்கின்றனர்.

இப்போட்டிகளில் 7தங்கம், 9 வெள்ளி, 13 வெண்கல பதக்கம் என மொத்தம் 29 பதக்கங்களுடன் இந்தியா 16 ஆவது இடத்தில் உள்ளது. 94

தங்கம், 73 வெள்ளி, 49 வெண்கல பதக்கங்கள் என மொத்தம் 216 பதக்கங்களுடன் சீனா முதலிடத்திலும், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் 2 மற்றும் 3 ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

ஹாக்கி (4)

8 ஆவது ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டிகள் சீனாவில் Hulunbuir ல் இன்று தொடங்கி வரும் 17 ஆம் தேதி வரை நடைபெற உள்ளன. இந்தியா, சீனா, மலேஷியா, கொரியா, ஜப்பான், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இப்போட்டிகளில் பங்கேற்கின்றன. இன்று இந்தியா-சீனா அணிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டியில் இந்தியா 3 க்கு பூஜ்யம் என்ற கோல் கணக்கில் சீனாவை வீழ்த்தியது.

வானிலை (12)

மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டிய வடமேற்கு வங்க கடல் பகுதியில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி இன்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது. இது அடுத்த 24 மணி நேரத்தில் வடமேற்கு திசையில் நகர்ந்து, ஒடிசா, மேற்கு வங்க கடற்கரையை நோக்கி நகரக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக ஆந்திராவில் இன்றும் நாளையும் அதிக கன மழைக்கு வாய்ப்பு உள்ளதால் அங்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அடுத்த 7 நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்ப உள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதனிடையே, சென்னை, கடலூர், நாகை, பாம்பன், தூத்துக்குடி உள்ளிட்ட துறைமுகங்களில் 1 ஆம் எண் புயல் எச்சரிச்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

*கண்காட்சி* (14)

புதுச்சேரி கடற்கரை சாலையில் உள்ள காந்தி திடலில் வடகிழக்கு இந்தியாவின் கொண்டாட்டமான ஆடி அருணிமா கண்காட்சியை முதலமைச்சர் திரு ரங்கசாமி திறந்து வைத்தார். மத்திய பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் இந்திய பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் மேம்பாட்டு கூட்டமைப்பு ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த கண்காட்சி 10 நாட்கள் நடைபெற உள்ளது. வரும் 15 ஆம் தேதி வரை நடைபெறும் இந்த கண்காட்சி தினமும் காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெற உள்ளது. இக்கண்காட்சியில் வடகிழக்கு மாநிலங்களான அசாம், திரிபுரா,

மணிப்பூர், நாகாலாந்து, மிசோராம், மேகாலயா மற்றும் அருணாச்சல பிரதேசத்தில் வாழும் மலைவாழ் மக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. கைத்தறி துணிவகைகள், அணிகலன்கள், மரச்சாமான்கள், சுடுமண் கலைபொருட்கள், மண்பாண்டங்கள், கண்கவர் ஓவியங்கள், திரைச்சீலைகள் உள்ளிட்ட பொருட்கள் 30 அரங்குகளில் விற்பனைக்கு வைக்கப் பட்டுள்ளன.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

வேளாண்மையின் சிறப்பை எடுத்துரைக்கும் நுவாக்கி பண்டிகை ஒடிசா மாநிலத்தில் இன்று கொண்டாடப்படுகிறது.

அனைவரும் கல்வி அறிவு பெறுவதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் சர்வதேச எழுத்தறிவு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

ஜம்மு காஷ்மீரில் நீக்கப்பட்ட சட்டப் பிரிவுகள் மீண்டும் சேர்க்கப்பட மாட்டாது என பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

பாரீசில் நடைபெற்று வந்த பாராலிம்பிக்ஸ் போட்டிகள் இன்றிரவு வண்ணமிகு கலை நிகழ்ச்சிகளுடன் நிறைவடைகின்றன.